**C.C. 184 of 2020** **Previous Date : 15.05.2025.**

**PW1**
**சுதா க/பெ.செந்தில் குமார்**

**12.08.2025**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 12.08.2025.**

**Accused present.**
**<u>முதல் விசாரணையின் தொடர்ச்சி</u>**

**1. ஆஜர் எதிரி தான் TN 21 J 8858 என்ற Ford fiesta வெள்ளை நிற காரை அந்த ஓட்டி வந்த நபர். போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

**2. எனக்கு எழுதப் படிக்க தெரியுமா என்றால் என்றால் ஆமாம். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 11ம் வகுப்பு படித்துள்ளேன். புகாரை யார் எங்கு வைத்து எழுதினார் என்றால் மருத்துவமனையில் வைத்து நான் சொல்ல சொல்ல எனது சித்தப்பா மதிவாணன் எழுதினார். புகாரில் முதல் பக்கத்தில் மேலிருந்து 2வது வரியில் இரவு என்ற வார்த்தையும் கீழிலிருந்து 6வது வரியில் இரவு 7.15 மணிக்கு என்ற வார்த்தையும் இடைசெருகலாக எழுதப்பட்டது என்றால் சரிதான். புகாரை எத்தனை மணிக்கு எங்கு கொடுத்தேன் என்றால் மருத்துவமனையில் வைத்து கொடுத்தேன். எனது கணவர் என்ன வேலை செய்தார் என்றால் S.S.Chamber என்ற கம்பெனியில் Manager ஆக வேலை செய்தார். சம்பவம் நடந்த தேதி என்ன விசேச நாள் என்றால் தை முதல் தேதி பொங்கல். நான் சித்தப்பா மதிவாணனுடன் பழனி வந்துவிட்டு அவருடன் சென்றேன் என்று சென்றேன் என்று சொல்லியுள்ளதில் நாங்கள் சென்ற வாகனத்தின் பதிவெண் மற்றும் வண்டிவகை விபரத்தை புகாரிலும், போலிஸ் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான், இருசக்கர வாகனம் என்று சொல்லியுள்ளேன். எனது கணவரை பைபாஸ் ரோட்டில் பார்த்ததாக சொல்லியுள்ளதில் அது எத்தனை மணி இருக்கும் என்றால் மாலை 6.45 மணி இருக்கும். பொங்கல் அன்றும் எனது கணவர் S.S.Chamber கம்பெனிக்கு வேலைக்கு சென்றாரா என்றால் ஆமாம். எனது கணவர் சம்பவதன்று வாகனம் ஓட்டும் போது helmet அணிந்திருந்தாரா என்றால் ஆமாம், அணிந்திருந்தார். எனது கணவருக்கு குடிபழக்கம் இருக்கிறதா என்றால் இருக்கிறது, ஆனால் அன்று குடிக்கவில்லை.**

எனது கணவரை பைபாஸ் சாலையில் வைத்து பார்த்ததாக சொன்ன பின்பு நானும் எனது கணவரும் எங்கள் ஊருக்கு செல்லும் நிலையில் நான் என் கணவரின் வாகனத்தில் செல்லவில்லை என்றால் சரிதான், நான் பொருட்கள் வைத்திருந்தேன்.

3. நான் எத்தனை பைகளில் பொருட்கள் வைத்திருந்தேன் என்றால் இரண்டு பைகளில் பொருட்கள் வைத்திருந்தேன். எதற்காக இறங்கி ஏற வேண்டும் என்று நினைத்து கணவரின் வண்டியில் செல்லாமல் சித்தப்பா வண்டியில் சென்றேன். பைபாஸில் எனது கணவரை குறிப்பாக எந்த இடத்தில் வைத்து பார்த்தேன் என்றால் பூங்கா ரோடு அருகே பைபாஸில் நான்கு சாலை சந்திக்கும் இடத்தின் அருகில் எனது கணவரை பார்த்தேன். நான் இருசக்கர வாகனத்தின் ஒரு பக்கமாக உட்கார்ந்திருந்தேனா அல்லது இருபக்கமாக உட்கார்ந்திருந்தேனா என்றால் இருபக்கமாக உட்கார்ந்திருந்தேன். கணக்கன்பட்டி சாலையான விபத்து நடந்த இடம் வாகன போக்குவரத்து அதிகம் உள்ள தேசிய நெடுஞ்சாலை என்றால் சாலை பெயர் பற்றிய விபரம் தெரியாது, வாகனங்கள் அதிகமாக செல்லும். எனது கணவரின் வாகனத்திற்கும், எங்கள் வாகனத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 10 மீட்டர் இருக்கும். நான் இரண்டு பைகளையும் வைத்து கொண்டு எனது சித்தப்பாவின் பின்னால் அமர்ந்திருந்ததால் முன்னால் செல்லும் வாகனம் பற்றி தெரியாது என்றால் சரிதான். சிந்தலவாடம்பட்டி ஊருக்கு முன்பாக கணக்கன்பட்டி சாலையில் விபத்து நடந்த பகுதி ஒரு சரியான வளைவு என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதிக்கு முன்பு வாய்க்கால் இருக்கும் பாலம் சாலையை விட சுருங்கி ஒடுங்கலாக இருக்கும் என்றால் சரியல்ல, சாலை அளவில் பாலம் இருந்தது. மதிவாணன், காளியம்மாள், லிங்கப்பன், விஜயராஜ், முருகன் ஆகியோர் எனது உறவினர்களா என்றால் மதிவாணன், காளியம்மாள் உறவினர்கள், மற்றவர்கள் ஊர்க்காரர்கள். மதிவாணன் Helmet அணிந்து வாகனம் ஓட்டினாரா என்றால் ஆமாம். மதிவாணனுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் ஆமாம். நாங்கள் செல்லும் சாலையில் இருந்து வலது பக்கம் திரும்பினால் தான் எங்கள் ஊர் உள்ளது என்றால் சாலையின் வலது பக்கம் சாலைக்கு மேலே உள்ளது. விபத்து நடந்த பகுதி விளக்குகள் இல்லாமல் இருட்டாக இருந்த பகுதி என்றால் அப்போது இருட்டவில்லை. விபத்து எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 6.45 மணிக்கு பிறகு 7.00 மணிக்குள் நடந்தது. பொதுவாக தை மாதத்தில் மாலை 6.00

மணிக்கு மழைகாலம் என்பதால் இருட்டிவிடும் என்றால் அன்று வெளிச்சம் இருந்தது. பொங்கல் தினம் என்பதால் சாலையில் அதிகமான வாகனங்கள் சென்று கொண்டிருந்தது என்றால் சரிதான், நான் என் வீட்டுக்காரரை பார்த்துக் கொண்டு தான் இருந்தேன்.

4. நாங்கள் சென்ற வாகனமும், கணவர் சென்ற வாகனமும் பேசி கொண்டு சென்றதால் எதிரே வந்த வாகனத்தை கவனிக்காமல் என் கணவர் கீழே விழுந்து அந்த வாகனத்தில் மோதிவிட்டார் என்றால் சரியல்ல. என் கணவர் தானாக தான் கீழே விழுந்துவிட்டார் என்றாலும் எதிரி மனிதாபிமான அடிப்படையில் அவருடைய காரில் என் கணவரை ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்கு சென்றார் என்றாலும் சரியல்ல. நான் என் கணவருக்கு பின்னால் எந்த வாகனத்திலும் பயணம் செய்யவில்லை என்றாலும், நான் என் கணவரை மருத்துவமனையில் சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல, எதிரியின் வாகனத்தில் தான் வந்து மருத்துவமனையில் சேர்த்தேன். எனது கணவரும், எனது சித்தப்பாவும் helmet அணிந்திருந்தார்கள் என்று புகார் மனுவிலும், போலிஸ் விசாரணையிலும் சொன்னேனா என்றால் சொல்லவில்லை, பதட்டத்தில் நடந்த விபரங்களை மட்டும் சொன்னேன். புகாரில் சொன்னதுபோல் நானும், எனது சித்தப்பாவும் எனது கணவருக்கு பின்னால் செல்லவில்லை என்றாலும் உண்மையில் அப்படி சென்றிருந்தால் எதிரியின் வாகன பதிவெண் விபரம் எழுதி கொடுத்துள்ள நிலையில் நாங்கள் சென்ற வாகனத்தில் பதிவெண்ணையும் சொல்லியிருப்போம் என்றாலும் சரியல்ல. நாங்கள் பின்னால் தான் சென்றோம் காரின் என்ணையும், எனது கணவரின் வாகண என்ணையும் எழுதி கொடுத்தேன், நான் சென்ற Discover வண்டி எண் எனக்கு தெரியவில்லை. நான் உண்மையாகவே சம்பவயிடம் சென்றிருந்தால் புகாரில் நேரத்தை குறிப்பிட்டு எழுதியிருப்பேன் என்றாலும் அவ்வாறு செல்லவில்லை என்றாலும் அதற்கு பின்பு நேரத்தை இடைசெருகலாக எழுதியுள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது கணவர் தான் பொங்கல் தினம் என்பதால் அதிகமாக மது அருந்திவிட்டு Helmet அணியாமல் சட்டவிதிகளை மதிக்காமல் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் எதிரே வந்த வண்டியை கவனிக்காமல் அவரே கீழே விழுந்து எதிரியின் வாகனத்தில் போய் மோதிவிட்டார் என்றால் சரியல்ல. எதிரி கவனமாகவும், நிதானமாகவும், சட்டவிதிமுறைகளை மதித்து வாகனம் இயக்கி வந்த காரணத்தினால்

தான் கீழே விழுந்த என் கணவர் மீது வாகனத்தை மோதாமல் நிறுத்தி பொங்கல் தினம் என்பதால் ஆம்புலன்ஸ் வர தாமதமாகும் என்று எதிரியின் சொந்த வாகனத்தில் அந்த பகுதியில் நடந்து சென்ற ஒருவரின் உதவியுடன் மனிதாபிமான அடிப்படையில் என் கணவரை மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் சரியல்ல. எந்த விபரமும் தெரியாமல் மற்றவர்கள் கூறியதன் அடிப்படையில் எதிரியின் வாகனம் மோதியதாக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவருக்கு விபத்து இழப்பீடு வாங்க வேண்டும் என்று பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.08.12 17:58:18 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**C.C. 184 of 2020** **Previous Date : 15.05.2025.**

**PW2**
**மதிவாணன் த/பெ.கிருஷ்ணசாமி**

**12.08.2025**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 12.08.2025.**
**Accused present.**
**<u>முதல் விசாரணையின் தொடர்ச்சி</u>**

1. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் TN 21 J 8858 என்ற Ford fiesta என்ற வெள்ளை நிற காரை ஓட்டி வந்து இறந்துபோன செந்தில்குமார் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய நபர். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் யூனியனில் ஒப்பந்தம் வேலை செய்கிறேன். நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் சிந்தலவாடப்பட்டியில் பிறந்தது முதல் குடியிருக்கிறேன். சிந்தலவாடம்பட்டியும் அதற்கு அருகில் இருக்கும் ஊரும் தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்து ஏற்படும் பகுதி என்றால் ஆமாம். தேசிய நெடுஞ்சாலையில் இருந்து வலது பக்கம் உள்ள இணைப்பு சாலையின் வழியாக சிந்தலவாடம்பட்டிக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான், முன்பு ஒற்றை சாலையாக இருந்தது. தற்போது நடுவில் சுவர் வைத்து இரண்டு பக்கமும் சாலை செல்கிறது. பொதுவாக அந்த சாலையில் ஊருக்குள் இருந்து சாலைக்கு வரும் நபர்களுக்கும் நெடுஞ்சாலையில் இருந்து ஊருக்கு திரும்பும் நபர்களுக்கும் விபத்து ஏற்படும் என்றால் ஆமாம். கணக்கன்பட்டிக்கும், சிந்தலவாடம்பட்டிக்கு இடையில் சாலையில் விளக்குகள் இல்லாமல் இருட்டாக இருக்கும் என்றால் சரிதான். கணக்கன்பட்டியில் இருந்து செல்லும்போது வளைவை தாண்டியவுடன் அகலமான சாலை குறுகலாகிவிடும் என்றால் சரிதான். அந்த குறுகலான பகுதியில் தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக போலிசார் என்னை எங்கு வைத்து எத்தனை மணிக்கு எந்த போலிஸ் விசாரித்தார் என்றால் 15.01.2020 ம் தேதி மருத்துவமனையில் வைத்து 7 – 7.30 மணியளவில் விசாரித்தார்கள். சம்பவயிடத்தை யார் போலிசாருக்கு எத்தனை மணிக்கு எந்த தேதியில் காண்பித்தார்கள் என்று தெரியுமா என்றால் என்றால் அது எனக்கு தெரியாது. நானும், சுதாவும் எந்த வாகனத்தில் சென்றோம் என்றாலும் எங்கு வைத்து செந்தில் குமாரை பார்த்தோம் என்றாலும் எனது வாகன

என் ஞாபகமில்லை, பழனி பைபாஸ் சந்திக்கும் பகுதியில் பழனியாண்டவர் கல்லூரி அருகில் பார்த்தேன். நானும், சுதாவும் பழனிக்கு எதற்காக வந்தோம் என்றாலும், பழனியில் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றாலும் பொருட்கள் வாங்குவதற்காக சுமார் 5 மணிக்கு வந்து ஒரு மணி நேரம் இருந்திப்போம். இறந்துபோன செந்தில் குமார் மது அருந்தும் பழக்கம் உடையவரா என்றால் இல்லை. எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர் எனது சொந்த அக்கா மகன். விபத்து நடந்த நாள் என்ன விசேச நாள் என்றால் தை 1 பொங்கல். தை 1 என்பதால் அந்த சாலையில் வாகன போக்குவரத்து அதிகம் இருக்கும் என்றால் ஓரளவுக்கு போகும்.

3. நான் எனது வாகனத்தை Helmet அணிந்து ஓட்டினேனா என்றால் ஆமாம். புகாரை யார் எங்கு வைத்து யார் சொல்லி எழுதினார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. புகாரை எங்கு வைத்து யார் யாரிடம் கொடுத்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எத்தனை மணிக்கு செந்தில் குமாரை பார்த்தேன் என்றாலும் எவ்வளவு தூரத்தில் செந்தில் குமாருக்கு பின்னால் நான் சென்றேன் என்றாலும் சுமார் 6.30 மணியளவில் பார்த்தோம். செந்தில் குமாருக்கு பின்னால் 20 அடி தூரத்தில் சென்றோம். செந்தில் குமாரை பார்த்த பின்பு அவரது மனைவியான சுதா எதற்காக செந்தில் குமார் வண்டியில் செல்லவில்லை என்றால் கையில் பொருட்கள் இருந்தது, செந்தில் குமார் வண்டி பல்சர் என்பதால் எனது வண்டியில் வந்தார். சுதா எனது வண்டியில் எனக்கு பின்னால் ஒரு பக்கமாக அமர்ந்திருந்தாரா, இரு பக்கமாக அமர்ந்திருந்தாரா என்றால் ஒரு பக்கமாக அமர்ந்திருந்தார். எனக்கு பின்னால் அமர்ந்திருந்ததால் சுதாவுக்கு முன்னால் செல்லும் வாகனத்தை பாக்க முடியாது என்றால் அந்த பெண்ணிற்கு தெரியாது. நானும், சுதாவும், செந்தில் குமாரும் பேசிக் கொண்டே சென்றோம் என்றால் இல்லை. கணக்கன்பட்டி தாண்டியவுடன் செந்தில் குமார் எவ்வளவு தூரத்தில் சென்று கொண்டிருந்தார் என்றாலும் எதிரே என்னென்ன வாகனங்கள் வந்தது என்று தெரியுமா என்றாலும் செந்தில் குமார் 10 – 20 அடியில் சென்று கொண்டிருந்தார், வந்த வாகனங்கள் விபரம் எனக்கு தெரியாது. செந்தில் குமாரை யார் எந்த வாகனத்தில் மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார்கள் என்றால் அடித்த அந்த காரிலேயே கூட்டி சென்றார்கள் சுதாவும் சென்றார். சம்பவயிடத்தில் சம்பவ நேரத்தில் நானும், சுதாவும் அங்கு இல்லை

என்றாலும் சம்பவத்தை நாங்கள் நேரில் பார்க்கவில்லை என்றாலும் உண்மையில் அங்கு இருந்திருந்தால் எனது சொந்த அக்கா மகன் உடன் நானும், சுதாவுடன் மருத்துவமனைக்கு சென்றிருப்பேன் என்றாலும் சரியல்ல.

4. சுதா காயம்பட்ட செந்தில் குமாருடன் மருத்துவமனை சென்றிருந்தார் மருத்துவமனையில் சேர்த்தவர் என்ற பெயரில் சுதா என்று எழுதப்பட்டிருக்கும் என்பதால் செந்தில் குமாரை சுதா மருத்துவமனையில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. செந்தில் குமார் பல்சர் வாகனத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சென்று அகலமான சாலையில் குறுகலாக மாறும் இடத்தில் எதிராக வந்த வாகனத்தின் மீது மோதமல் இருக்க வேண்டும் என்று கீழே விழுந்து எதிரியின் வாகனத்தின் மீது மோதினார் என்றாலும் எதிரி கவனமாகவும், சட்டவிதிகளை பின்பற்றி வாகனத்தை ஓட்டி சரியான திசையில் வந்து கார் வாகனத்தை நிறுத்தி விட்டார் என்றாலும், மனிதாபிமானத்தின் அடிப்படையில் சாலையில் விழுந்த செந்தில் குமாரை அங்கு நடந்து வந்த ஒருவர் உதவியுடன் பழனி அரசு மருத்துவமனையில் சேர்த்தார் என்றாலும் சரியல்ல. இந்த விபத்திற்கு முழு காரணம் செந்தில் குமார் அவரது வாகனத்தை அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டியது தான் காரணம் என்றால் சரியல்ல. இறந்துபோனவருக்கு இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக எந்த சம்பவமும் பார்க்காத சுதா கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.08.12 17:58:24 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.